

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் நேற்று (08.10.2025) மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 119 பணியிடங்கள்

# மாற்றுத்திறனாளிகளுக்கான பணியிடங்களாக மாற்றி அரசாணை வெளியிட்ட முதல்வருக்கு நன்றி!

## மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை!

தஞ்சாவூர் அக்.9-

அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பங்களிப்பை பெரிதும் உயர்த்தும் வகையிலும், அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் 119 அரசு பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையாக அடையாளம் காணப்பட்டுள்ளதை வரவேற்று மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் அ.ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை; ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு கண்டறியப்பட்ட தகுதி உள்ள பணியிடங்கள் அரசாணை எண் 20 வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்த வருகிறது. அதனுடைய தொடர்ச்சியாக தற்போது பல்வேறு அரசு துறைகளில் 119 பணியிடங்கள் மாற்றுத்திறனாளிகள் பணி புரிவதற்கு தகுதி வாய்ந்த பணியிடமாக மாற்றி அரசாணை வெளியிட்ட தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்பொழுதெல்லாம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற காலத்தில் மாற்றுத்திறனாளிகள் என்ற தனித்துறையை உருவாக்கி தன்னுடைய நேரடி பார்வையில் வைத்திருந்தார். அதுபோல இன்றைக்கு மு.க. ஸ்டாலின் அவர்களும், மாற்றுத்திறனாளிகள் துறையை தன்னுடைய நேரடி பார்வையில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு அதிகப்படியான நிதிகளை ஒதுக்கி நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மாற்றுத்திறனாளிகள் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு தற்போது அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பை நான்கு சதவீதம் உறுதி செய்யும் விதமாக அவர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை உயர்த்து வகையில் குறிப்பாக கனிம வளம், சட்டம், கூட்டுறவு, ஊராட்சி, நகராட்சி, போக்குவரத்து, நெடுஞ்சாலை துறை, சுற்றுலா, வேளாண் தகவல் தொழில்நுட்பம் ,உள்துறை நிதி, நிர்வாகம், சுகாதாரம், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 119 பணியிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் இப்ப பணியிடங்களில் விண்ணப்பித்து பணி வாய்ப்பை பெறுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளதற்கும், தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாற்றுத்திறனாளி கள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு ஆசிரியர் தகுதி தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கு 60 சதவீத மதிப்பெண்ணை தகுதி மதிப்பெண்ணாக நிர்ணயம் செய்ய வேண்டும். பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு காலிப் பணியிடங்களை சிறப்பு தேர்வு மூலம் அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் ரகமதுல்லா அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# நன்னிலம் அரசு கல்லூரியில் சமூகநீதி விடுதி திறப்பு!

திருவாரூர், அக்.9-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சமூகநீதி விடுதியினை திறந்து வைத்ததனை தொடர்ந்து, மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.. வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் ஆகியோர் குத்து விளக்கேற்றி வைத்து, சமூகநீதி விடுதியினை பார்வையிட்டார்கள்.

பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா - திட்டத்தின் கீழ் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில், கல்லூரி மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தரைதளம் (4814.24 சதுர அடி), முதல் தளம் (4186.82 சதுர அடி) மற்றும் மாடிபடி அறை (286.22 சதுர அடி) என மொத்தம் 9287.28 சதுர அடி பரப்பளவில் விடுதி அமையப்பட்டுள்ளது.

மேற்படி விடுதியின் ஒவ்வொரு தங்கும் அறையிலும் மாணவியருக்கு தனித்தனியாக கட்டில், படிப்பதற்கான மேசை, இருக்கைகள் மற்றும் ஒப்பனை அறை வசதிகள், நூலக அறை, பணியாளர் தங்கும் அறை, காப்பாளினி அறை, பொருள் வைப்பு அறை, உணவு தயாரிப்பதற்கான சமையலறைக் கூடம், எரிபொருள் அறை, உணவு உண்ணும் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

மேலும் கூடுதலாக மாணவியர்களின் பாதுகாப்பிற்காக முள்கம்பியுடன் கூடிய சுற்றுச்சுவர் வசதியும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் வே.மனோகரன், நகரச் செயலாளர் பக்கிரிசாமி, பேரூராட்சித் தலைவர் ராஜசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், விடுதி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை ரூ.6 கோடியே 33 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 33 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-10-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பி.ராமசாமி, எ.பாதர்பேட்டை அஞ்சல், துறையூர் தாலுக்கா, திருச்சி | 25,000/–– |
| 2. | வி.பிரபு, லட்சுமிபுரம், கத்தாயம்பட்டு அஞ்சல், வேலூர் – 632 312 | 25,000/– |
| 3. | எஸ்.வேதரெத்தினம், மடப்புரம், தீவம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் மாவட்டம் | 25,000/– |
| 4. | பி. பெருமாள், மேலப்பொன்னகரம் 5வது தெரு, கரிமேடு, மதுரை | 25,000/– |
| 5. | எஸ்.எம்.பரமசிவம், காந்தி நகர், ஜக்கமநாயக்கன்பட்டி, போடி, தேனி மாவட்டம் | 25,000/– |
| 6. | வி.சுப்பிரமணி, 10வது வார்டு, ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாலசமுத்திரம் | 25,000/– |
| 7. | பி.ஆண்டி, வட்டான்வலசை, செம்பிடையார்குளம், மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 8. | அ.செல்வம், நேருஜி தெரு, சாத்தூர், விருதுநகர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்

# ரூ.21.98 கோடியில் பூம்புகாரில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தகவல்!

சென்னை, அக்.9-

தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில் ரூபாய் 21.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரைவில் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (08.10.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இரா. இரோஜேந்திரன் தெரிவித்ததாவது: முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் மாவட்ட வாரியாக பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிநாட்டின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கிய துறைமுகம் நகரமான பூம்புகாரில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ரூபாய் 21.98 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இதில் நுழைவு கட்டண அறை, தகவல் மையம், வாகனம் நிறுத்தும் இடம், சுற்றுச்சுவர் அமைத்தல், பொருட்கள் வைக்கும் அறை, நடைபாதை, கழிப்பறை, போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பாரம்பரிய மின் விளக்குகள் ஏற்பாடு மற்றும் கட்டிடக்கலை உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படும்.

சுற்றுலாத்துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் நம் பாரம்பரிய மிக்க தொன்மை வாய்ந்த பிரசித்திபெற்ற கோவில்கள், புராதான சின்னங்கள் மற்றும் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி வால்பாறை போன்ற இயற்கையாக அமையப்பெற்ற மலைவாச சுற்றுலாத் தலங்கள். தமிழ்நாட்டின் மாவட்ட வாரியாக சுற்றுலா தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாவட்டந்தோறும் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா தலங்களில் போக்குவரத்து முதற்கொண்டு, விருந்தோம்பல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திதர வேண்டும் இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி.ச.கவிதா கண்காணிப்பு பொறி யாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை அறிவியல் மாணவர்களின் கோரிக்கையை ஏற்று மூன்று புதிய வழித்தடங்களுக்கு பேருந்து சேவைகளை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் துவக்கி வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, ஒன்றிய கழக செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், நகர செயலாளர் பூக்கடை கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வானூர் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம், பிடாரிப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை துவக்கி வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் R.S.வாசன், ஒன்றிய கழக செயலாளர் வே.கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.